உ

சிவமயம்.

திருவகீந்திரபுரத்திற் கடுத்த குணமங்கலம்
நகர்கண் விளங்கும்
ஸ்ரீ மாரியம்மன் பேரிற் பதிகம்.

இஃது

குணமங்கலம் மகா-ள-ள-ஸ்ரீ கே. முத்துக்குமாரசுவாமி பிள்ளை, பா. ல. இராஜகோபாலுபிள்ளை இவர்கள் வேண்டு கோளின்படி

சென்னை சோதிடம் மகா-ள-ள-ஸ்ரீ புருஷோத்தம செட்டியார் அவர்கள் மாணுக்கரில் ஒருவருமாகிய

புதுவை

வைத்தியம் மகா-ள-ள-ஸ்ரீ புருஷோத்தம நாயகர் அவர்கள் குமாரருமாகிய

மகா-ள-ள-ஸ்ரீ ஷண்முக நாயகர் அவர்களால்

இயற்றியதை

திருவாரூர் நீலலோசனி பிராஞ்சு அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டு.

தலைச்சங்காடு C. வெங்கட்டராயலு செட்டியாரவர்களால்

வெளிப்படுத்தப்பட்டது.

1911.

பெய்ப்பசுங்குழையிலகு புஜமும் வார்கொங்கையும்
பருகர் வளர்ந்த கரமும்
எரிலகு நீர்ச்சுழியுமுந்தி மேற்கலையு மின்
னிடையிலொட்டியாணவழகும்.
யெழிலுரு பதங்களி விசைந்திடு சதங்கைக
ளிலங்கயான் காணவருவாய்
சீருலவு செங்கமல மலர்திவ்ய வாவிசூழ்ச்
செழியுகுண மங்கலமதிற்
றிகழுமென்னம்மையகமகிழ் நடம்புரியம்மை
ஸ்ரீ மாரியம்மை யுமையே. (௧)

ஆதிமறை தேடவறியாதசுகவாரியா
யமரர்தொழு மதிகாரியாய்
ஐம்பூத கருவிகாரணாதி யிருவினைகளா
லறியப்படாத பொருளாய்ச்
சாதிமுறை யெண்பத்துநான்கு நூறாயிரந்
தழைத்தருளுயிர்க்கன்னையாய்ச்
சர்வநிட்களநித்யதத்வ பராசக்தியாய்த
தற்போத சிற்சத்தியாய்
பாதிமதி சடையணிந்தருள்பரமரொடுநடம்
பகிருகாரணிபூரணி

பார்பரிமஹேஸ்வரியகோரித்திரியம்பஹி
    பைரவி யெனைக்கார்த்திடாய்.
சீதரன் தங்கையபிராமிவலு கேமியே
    செழியுகுணமங்கலமதிற்
றிகழுமென்னம்மை யகமகிழ்நடம்புரியம்மை
    ஸ்ரீ மாரியம்மையுமையே. (௨)

ஓங்காரவட்டத்து ளொளிர்கின்ற பிரணவி
    யுள்ளொளிர்விளங்குரூபி
உதையகிரி யணைமீதிலிலங்குபரசுந்தரி
    வுலகுவுயிரானசத்தி
ஆங்காரமைம்புல மடங்குமெய் யோகியர்க்
    கட்டமா சித்தியருளும்
அகிலபுவனேஸ்வரி கருணைபுரியீஸ்வரி
    யாயிமகமாயிதாயே
ஸ்ரீங்காரயிடைகலையை பிங்கலையிலூட்டியென்
    றிருநுதல் விழிதிரந்து
திவ்யசாம்பவி தினைத்தரிசித்துவுய்யவே
    திருவருள் புரிந்தாளுவாய்
செங்கமுகு சோகுபுனை மந்தாரைகதலிதரு
    செழியுகுண மங்கலமதிற்

திகழுமென்னம்மை யகமகிழ் நடம்புரியம்மை
ஸ்ரீ மாரியம்மையுமையே (௫)

கொஞ்சுகிளியே மௌனமோனகிளியேஞான
குண்டலிச் சத்திகிளியே
கோகனகமான கிளியே சித்ரநவரத்ன
கோதிலானந்தகிளியே
அஞ்சல்கிளியே யமரர்பரவுகிளியே தில்லை
யம்பலத்தாடுகிளியே
அருள்பானு கோடிப்ரகாசகிளியேபிரம்ம
வத்துவித முற்றகிளியே
பஞ்சவர்ணகிளியே புருவநடுவிலேழு
பரமசைதன்யகிளியே
பங்கேருகத்தில் விளையாடுகிளியேசகல
பாக்கியமருள் தெய்வகிளியே
செஞ்சிலம் பொலிபதமெனக்கருள வந்தருட்
செழியுகுணமங்கலமதிற்
திகழுமென்னம்மை யகமகிழ்நடம்புரியம்மை
ஸ்ரீ மாரியம்மையுமையே. (௬)

அரியகபவாத முடனையமேலிட்டுநல்
லரிவழிக்தவசமாகி

யகநாட்டிகள் தளர்ந்திருவிழியுடைந்து தி
　மாரிநீராகிவிடவும்
விரிபொரிபுலன்களொடு காரணமுமடங்கிடவும்
　வீயுமுயிரூசலாட
விண்ணின்றிழிந்தெமபடாள் வந்தழைத்திடவும்
　விரிமனை விமக்கள்சுற்றம்
பிரியமுடன் மிகவாடி யுள்ளங்கலங்கியிப்
　பேதைபடு துயர்கலவே
பீடுவெண்ணீ ரணிந்துன்பதந்தரிசிக்க
　பிரியமுடனருள்புரிகுவாய்
செரியுநற் சோலைகதிர்மணி கொழிக்கும்பதிச்
　செழியுகுணமங்கலமதிற்
திகழுமென்னம்மை யகமகிழ் நடம்புரியம்மை
　ஸ்ரீ மாரியம்மை யுமையே. (௬)

அன்னமேயடியருள மகிழும் பிரசன்னமே
　யழகுறுபசுஞ் சொர்ணமே
அருள்காமதேனுவேகிருபை பொழிமாரியே
　யந்தரத்தெழு திங்களே
பன்னுமென் மாதா பிதா குருத்தெய்வமென
　பாதவனஜம் நம்பினேன்

பாலலோசன கமலநயனனிடபாகமமர்
  பாலிமாதங்கிநீலி
மின்னலிடையார்களொயிலுன்னி புண்ணாகியே
  மென்றும் வருந்துகசடன்
மேலுமதுகருணைவைத்தாண்டு வருமைப்பிணிகள்
  விட்டேகவருள்புரிகுவாய்
சின்மயவிசாலி பரிபூரணிமனோன்மணிச்
  செழியுகுணமங்கலமதிற்
றிகழுமென்னம்மையகமகிழ் நடம்புரியம்மை
  ஸ்ரீ மாரியம்மையுமையே. (௬)

ஓதருஞ்சாந்திநல்விசாரமொடுசெந்தோட
  முயர்சாது சங்கமென்னும்
உருமோக்ஷவதிகாரி நால்வர்களிடத்தினு
  மொருங்குடன் பழகியறியேன்
தீதகன்றிடு நான்கு சாதன முணர்ந்திலேன்
  றிகழுமுன்னதிவலஞ்
சென்றுதொழுதுருகிபரவசமாக நின்றிலேன்
  செழுமலரெடுத்து நிருதாட்
பாதகமலந்தனி லருச்சனை புரிந்துமுன்
  பழவடியர்பக்கலணுகேன்

மாரியம்மன் [illegible]திதம்.

146977
-600 005.

பகாறிய நின்னும முச்சரித்[illegible]கிலன்
பாவியெவ்வகையுய்வனே
சீதளஞ்செறி யுமலர்மீதளிகள் வந்திசைச்
செப்புகுணமங்கலமதிற்
றிகழுமென்னம்மை யகமகிழ் நடம்புரியம்மை
ஸ்ரீ மாரியம்மையுமையே (எ)

இன்னிலந்தன்னில் நரனாய்ப்பிறந்தியான்பட்ட
இம்ஸைகள் போதுமம்மா
இனியாகிலுன்மனமிரங்கி யிச்செனனம
தெடுக்காமல் முத்தியருள்வாய்
கன்னக்குடும்பமாங்கவலைப் பசாசதெக்
காலமும் போராடுதே
கருதரியபாசத்திறலெல்லையும் நின்போத
கத்தியாற் பொடியாக்குவாய்
பன்னஹாடணிந்தபார்வதியம்பிகைகௌரி
பரமகல்யாணிவேணி
பாபியென்றீ வினையகற்றிக்கடைக்கண்விழி
பார்த்தருட் சமையமிதுவே
செந்நெல் செஞ்சாலி முற்றீனுதண்பணைகள்சூழச்
செழியுகுணமங்கலமதிற்
றிகழுமென்னம்மையக மகிழ்நடம்புரியம்மை
ஸ்ரீ மாரியம்மையுமையே (அ

O25:4J7
N41

ஓயாதிலம்பாடினாலுள்ளமிகவாடி
  யுலகிலெங்கெங்குமோடி
ஊர்நாயெனத்திரிந்த வரவரிடஞ்சென்
  றுபாதியாற்கை யேந்தியே
நாயகிநிற்கு மென்குறையாவருடனறைவ
  நனிசடற் சோக்குபோல
நானலைவதுன் றனுக்கழகாகுமோவம்ம
  நாடியேயுளமிரங்கித்
தாயாகவந்து நற்றயவாயழைக்கவித்
  தரையதனில் நின்னையன்றித்
தக்கதோர்தெய்வமில்லை குறைதவிர்த்தாண்டிடாய்
  சங்கரிகபாலிமாலி
சேயாதி திரள்கூடி விளையாடல்புரிவீதி
  செழியுகுணமங்கலமதிற்
  றிகழுமென்னம்மையகமகிழ நடம்புரியம்மை

  ஸ்ரீ மாரியம்மை யுமையே. (க)

  மாறுதவஷ்டகருமங்களொடு பேய்பூத
  மாடன்கருப்பன்முனிவன்
மன்னிருசிகாட்டேரி பிரமராக்ஷதபூத
  மாளாத துஷ்டகணமும்
வீறுகவருகுலைசுரகுன்ம காசமொடு
  மீறுபயித்தியவாதமும்

விள்ளரும் பெருவியாதி நீரிழிவுகுட்டமும்
விரிந்திடுமேகவெட்டை
சீறுபாரிசவாய்வு குமரகண்டம்பிளவு
தீராதகுடல்வாதமுந்
தீர்ந்திடுமுனது திருவெண்ணீறணிந்திடத்
தேவிசாமுண்டிநீலி
சீராகமுகிலினஞ்செறிந்து நன்மாரிபொழி
செழியுகுணமங்கலமதிற்
றிகழுமென்னம்மை யகமகிழ் நடம்புரியம்மை
ஸ்ரீ மாரியம்மையுமையே. (௰)

எத்தனை விதஞ்சொல்லியேழை என்குறைகளை
யெடுத்தோதி நின்றுன்முன
மேங்கிமிகவாடியான் முறைகளிடுகின்றதுன்
னிருசெவிக்கேறிடாதோ
சித்தமினியாகிலுமிரங்கி வினை நீக்கிநின்
சீர்பதந்தந்தருளுவாய்
சின்மயசொரூப பரிபூரணிமனோன்மணி
செல்விமாதங்கிதுர்க்கி
பத்தியுடனே புருஷவுத்தமன் செய்தமிழிற்
பதிகம் புகன்றுநின்றேன்
பரிவாயுளங்கொண்டு பாபங்களைத்தீர்த்து
பக்ஷமொடிரக்ஷைபுரிவாய்
சித்தர்முனி வோரமரர் வித்தகர்கள் போற்றிடுஞ்
செழியுகுணமங்கலமதிற்
றிகழுமென்னம்மை யகமகிழ் நடம்புரியம்மை
ஸ்ரீமாரியம்மையுமையே (௰௧

 14977 மாரியம்மன்பதிகம்.

மனுமுறைகொள் விரோதிகிருதுவருடமதனிலே
  மாமி தின[illegible]ம்திலே
  வளாசுகரவாரமதிலே
தினகரனுதையநாழிருபதேழரையிலே
  திகழ்வில்விராசிதலிலே
சித்தியோகத்திலே திதித்திருதிகையிலே
  செப்பருமவிட்டமதிலே
கனமோங்கி செழியுகுண மங்கலந்தன்னில்வாழ்
  கமழும் வன்னியமரபதிற்
கமலாஜனன்மகிழுஞ் ஜம்புரிஷி கோத்திரங்
  கழருமுத்துக்குமரனும்
புனிதகுணருஜகோபாலும் படித்தவர்கள்
  பொங்கமாய்க் கேட்பவர்மனம்
பூரித்து வச்சிற் பதித்திடுவெரிவரெலாம்
  புவியதனில் மிகவாழியே (௰௨)

வாழிவிருத்தம்.

அரனரியயனும்வாழி யமரர்மா முனிவர்வாழி
பரிதியுமதியும்வாழி பாவலராசாவாழி
திருகுணமங்கலத்திற்றிகழ்மகமாரிவாழி
குரிகுமர்நான்குமிந்த வையமும் வாழிமாதோ

திருவகிந்திரபுரத்திற் கடுத்த குணமங்கலம்
நகர்கண் விளங்கும்

ஸ்ரீ மாரியம்மன் பேரிற் பதிகம்

முற்றிற்று.